பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : ஐப்பசி 3 (19—10—68) சனி ★ வெளியூர் : ஐப்பசி 4 (20—10—68) ஞாயிறு [இதழ் : 103

இதுவரை 10,000 டன் குறுவை கொள்முதல்

தஞ்சை, அக். 19—

தஞ்சை மாவட்டம் முழுவதிலும் குறுவை அறுவடை (ஏ. டி. டி. 27) முழு மூச்சுடன் நடைபெற்று வருகிறது.

நாள்தோறும் 1,500 டன் அரிசி வந்தவண்ணமிருக்கிறது.

இதுவரையில் 10,000 டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது; இதில் 3,500 டன் சென்னை உட்பட இதர இடங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

காமராசரின் விசித்திர தத்துவம்

கழக ஆட்சியின்மீது அர்த்தமற்ற குற்றச்சாட்டுகள்

அமைச்சர் மா. முத்துசாமி தரும் பதில்

சென்னை, அக். 19—

"மாநகராட்சித் தேர்தலில் தி. மு. சழகம் 80-க்கு மேற்பட்ட இடங்களைப்பெறும் என்று என்னிடத்திலே நமது தோழர்கள் நம்பிக்கையுடன் தெரிவித்தார்கள். கழகத் தோழர்கள் காட்டும் சுறுசுறுப்பும், ஆற்றிவரும் பணிகளும் அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்துகின்றன.

"அண்ணா அவர்கள் இந்த நேரத்தில் இங்கே இல்லை என்றாலும், ஒவ்வொருவரும் தங்களையே அண்ணாவாகக் கருதிக்கொண்டு கடமையுணர்ந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று உள்ளாட்சித்துறை அமைச்சர் மா. முத்துசாமி அவர்கள், சென்னை 6-வது வட்டததில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், காங்கிரசுக்காரர்களின் பொருத்தமற்ற குற்றசாட்டுக்களுக்குப் பதிலளித்து, கழகத்தின் அரும்பெரும் சாதனைகளை விளக்கினார்.

அமைச்சர் பேசுகையில் மேலும் விளக்கியதாவது :—

பரிதாப நிலையில் காங்கிரசு !

"'இந்தத் தேர்தலில் அவ்வளவு முக்கியத்துவமிருக்கிறதா?' என்றுகூட எண்ணக்கூடும். மாநகராட்சிமன்றத் தேர்தலில் அரசியல் முக்கியத்துவத்தை ஊட்டுபவர்கள் காங்கிரசுக்காரர்கள்தான் !

கேரளத்தில் வெள்ளப் பெருக்கு —பீகாரில் வெள்ளப் பெருக்கு —அங்கெல்லாம் சென்று ஆறுதல் அளிக்கவேண்டிய நிஜலிங்கப்பா, இங்கு வந்து --- சென்னை மாநகராட்சி பற்றிக் கவலைப்பட்டுப் பேசுகிறார்.

நிஜலிங்கப்பா சென்னை வந்தபோது, 'காமராசர்-சுப்பிரமணியம் கோஷ்டி' என்ற நிலையில், மனுக் கொடுக்கவேண்டிய பரிதாப நிலையிலிருந்துவருகிறது காங்கிரசுக் கட்சி !

முயலட்டுமே அவர்கள் !

ஒன்றரை ஆண்டுக் காலமாக எதிர்க் கட்சியாக இருக்கின்ற காங்கிரசு, அதனுள்ளே நிலவுகின்ற பூசல் -- பொருமைகளை ஒழித்து, 1972 தேர்தலில் அதிக இடத்தைப் பிடிக்க முயட்டும் ! அதுதான் சனநாயகம் ! அதை விடுத்து, 'தி. மு. க. உடைந்துவிட்டது' என்று பேசுவது, கண்ணாடி முன் நின்று காரித் துப்புவது போலாகும் !

'கொடுமை' என்ன செய்தோம்?

ஒன்றரை ஆண்டு ஆட்சிக் காலத்தில், தி. மு. கழகம், மக்களுக்கு ஏதேனும் கொடுமைகளைச் செய்ததா ?

வீராணம் ஏரியிலிருந்து காவிரி நீரைச் சென்னைக்குக் கொண்டு வரத் திட்டமிட்டிருக்கிறது !

துர்நாற்றம் வீசி, நகரின் சுகாதாரத்தைக் கெடுத்து வரும் கூவம் ஆற்றைச் சீர்படுத்தத் திட்டமிட்டிருக்கிறது !

இன்னும் தேவையான பல வசதிகளையெல்லாம் அது செய்துவந்திருக்கிறது !

பண்டித நேருவே, சென்னை மாநகராட்சியில், தி. மு. க. நிர்வாகத்தைப் பாராட்டியிருக்கிறார் !

தமிழக அரசை இந்திரா காந்தி பாராட்டியிருக்கிறார் !

என்ன அதிகாரமிருக்கிறது ?

மாஸ்கோவில் ஆண்டுக்கு 5 இலட்சம் வீடுகள் கட்டித் தருகிறார்கள் ! அங்கு ஓடுகின்ற இரயில்—பஸ்—மோட்டார்—மற்றும் உணவு விடுதிகள் அனைத்தும் மாநகராட்சிக்குச் சொந்தமானவை !

இங்கு இரயில்வே மேம்பாலம் போட வேண்டுமானால், டில்லி அரசின் ஒப்புதலைப் பெறவேண்டும் ! மாநில அரசுக்கும் அதிகாரமில்லை -- மாநகராட்சிக்கும் அதிகாரமில்லை !

எவ்வளவு பெரிய தத்துவம் !

காமராசர் பேசுகிறார்—'பணக்காரர்கள் மின்சார வசதி வைத்துக்கொள்கிறார்கள்; ஏழை மின்சார வசதிபெற வேண்டுமானால் காங்கிரசுக்கு ஓட்டுப் போடுங்கள்' என்று ! எவ்வளவு பெரிய தத்துவம் !

இது என்ன அற்பத்தனம் ?

அறிஞர் அண்ணா அவர்களைக் காட்டி ஓட்டுக் கேட்கிறோமாம் !

ஆனல் அவர்கள், காந்தியின் சாபபலைக் காட்டி -- எலும்பைக் காட்டி -- ஓட்டுக் கேட்கலாமாம் !

எங்கள் தலைமுறையில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தலைவர்—

(4-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்பு

21—10—68 அன்று நமது அலுவலகத்திற்கு விடுமுறையாகையால், 'நம் நாடு' அடுத்த இதழ் 22—10—68 அன்று சென்னையிலும், மறு நாள் வெளியூர்களிலும் கிடைக்கும்.

—பொறுப்பாளர்

அந்த நாளேட்டுக்கு நன்றி!

அண்ணன் அளிக்கிறார் ரூபாய்க்குப் படி அரிசி !

அவர்தம் தம்பி வெற்றி பெற ஆதரிப்பீர் உதயசூரியன் !

என்ற கழகச் சுவரொட்டி, நகரத்துத் தெருக்களில் காணப்பட்ட நாற்பத்தெட்டு மணி நேரத்தில், காங்கிரசு வட்டாரத்துக்குத் தேர்தல் சுரம் உச்ச கட்டத்தை எட்டியிருக்கிறது --- என்பதனை, நேற்று வெளிவந்த 'நவசக்தி' இதழ் மெய்ப்பித்திருக்கிறது !

கழக அரசு பதவிக்கு வந்தபின் சாதித்துள்ளவைகளில் மகத்தான திட்டம், 'படி அரிசி'தான் என்பதற்கு, இனி வேறு எங்கும் -- எவரிடமும் சென்று ஆதாரமோ, ஆதரவோ தேட வேண்டியதில்லை !

நகர மக்களை வாழவைக்கும் படி அரிசித் திட்டம் தான் கழகத்தை இன்னும் ஒருமுறை நகராட்சியில் அமர்த்த இருககும் தலையாய பெருமைகளில் ஒன்ருக இருக்கிறது என்பதனை --- யார் நம்பினாலும் நம்பாவிட்டாலும் --- தமிழ்நாடு காங்கிரசு மனமார -- திடமாக நம்புகிறது என்பதனை, நேற்றைய 'நவசக்தி' இதழின் எட்டுப் பத்தித் தலைப்பு எடுத்துச் சொல்லியிருக்கிறது !

படி அரிசித் திட்டம் நகரத்துக்கு எந்த வகையில் பேருதவியாக இருக்கிறது என்பதனை, இனி சழகத்தவர் எடுத்தியம்பிக் கொண்டிருக்கத் தேவையில்லை !

சென்னையைப் பொறுத்தவரையில், மாநகராட்சியில் தி. மு. கழகம் இந்த முறையும் பதவியில் அமர்த்தப்படும என்ற ஒரு நிலைக்கு மக்கள் விரும்பும திட்டமாக 'படி அரிசி' இருக்கிறது என்பதனை, 'நவசக்தி' இதழ், சொல்லாமல் சொல்லியிருக்கிறது !

"படி அரிசித் திட்டம், நீடிக்கும் --- தொடரும்; செயற்கை பஞ்சத்தை உருவாக்குவோர் கடுந் தண்டனைக்கு உள்ளாவார்கள்" என்ற ஒரு திட்டவட்டமான அறிவிப்பை உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்களிடமிருந்து தமிழகம் மீண்டும் பெறும் ஒரு வாய்ப்பினையும், தராமல் தந்து உதவியிருக்கிறது --- தமிழ்நாடு காங்கிரசின் அந்த ஓரளவு அதிகாரபூர்வமான நாளிதழ் !

"காங்கிரசின் மீது நம்பிக்கை வைத்து தேர்தலில் அதற்குப் பெரும்பான்மை தாருங்கள்; உறுப்பினாகள் யாரேனும் தவருக நடந்தால், அதற்கான பொறுப்பினை நான் ஏற்கிறேன் --- எனது கட்சி ஏற்கும்"

என்ற சுப்பிரமணியம் அவர்களின் 'ஜாமீன் பத்திரம்', காங்கிரசின் கடைசித் தொண்டன் பார்வைக்குக்கூட இன்னும் தெரியவந்திருக்காது !

ஆனல், அதற்குள்ளாக,

"படி அரிசித் திட்டம் கைவிடப்படும்"

என்ற ஒரு மோசடிச் செய்தியை, மூலையில் கூட அல்ல—மனந் துணிந்து எட்டுப் பத்தித் தலைப்பாக்கி --- பரபரப்பூட்டி --- பீதியடையச் செய்து --- அதன் நிழலிலாவது வெற்றி பெற முடியாதா என மனப்பால் குடித்திருக்கிறது, 'நவசக்தி' நாளேடு !

★ **செய்திக்கு ஆதாரம் உண்டா?**

★ **வேறு எந்த நாளேடுகளுக்கும் தெரியாத தகவல், 'நவசக்தி'க்கு மட்டும் எப்படித் தெரிய வந்தது?**

★ **அரசியல் கலக்காத ஒரு நிர்வாகத் திட்டம் பற்றிய செய்தியை வெளியிடும்போது அடிப்படையைச் சேகரித்துக்கொண்டு தகவல் தர வேண்டாமா?**

இந்தக் கேள்விகளுக்கு நாம், 'நவசக்தி'யிட மிருந்து பதில் எதிர்பார்க்கவில்லை; ஆனல், சுப்பிரமணியத்திடமிருந்து, தக்க சமாதானம் எதிர்பார்க்கிறோம் !

நகராட்சித் தேர்தலில் போட்டியிடும் 120 காங்கிரசு வேட்பாளர்களுக்குப் 'பொறுப்புப் பத்திரம்' வழங்கும் சுப்பிரமணியம், ஒரே ஒரு நாளேட்டின் இந்த பொறுப்பற்ற செயலுக்கு என்ன விளக்கம் தர முடியும்?

போர்க் காலங்களில், வலிமை குறைந்த எதிரி கடைபிடிக்கும் பேடித்தனமான பொய்ப் பிரச்சாரப் பாணியில், சாதாரண மாநகராட்சித் தேர்தலில் தமிழ்நாடு காங்கிரசின் முக்கிய அங்கமான ஒரு நாளேடு, 'பொய்க் கோலம்' பூணவேண்டிய இழிநிலைக்குப் போனதேன் ?

பெரும்பான்மையைப் பெற்ருல் காங்கிரசு உறுப்பினர்களின் நன்னடத்தைக்கு 'ஜாமீன்' தரும் சுப்பிரமணியம், அந்தப் பெரும்பான்மையைப் பெற வேண்டுமென்பதற்காகவே கடைபிடிக்கும் இந்த 'இருட்டு வேலை'யை அனுமதிக்கிருரா?

பதவிக்கு வருவதற்கே பொய்ப் பிரச்சாரம் -- பீதிச் செய்தி -- அத்தனையும் தேவைப்படுகிறதென்ருல், பதவிக்கு வந்த பின்பு என்னென்ன தேவைப்படுமென்பதை சுப்பிரமணியம் அவர்கள் முன்கூட்டி உணராததனுல்தானே என்னவோ -- தன்னையும் தமிழ்நாடு காங்கிரசையும் 'ஜாமீன்' ஆகக் கொடுத்திருக்கிருர் !

அண்ணன் அளிக்கிருர் படி அரிசி

என்ற வண்ணச் சுவரொட்டியின் கருப்பொருள், இப்போது மேலும் பிரபலமும், முக்கியத்துவமும் அடைந்துவிட்டது !

படி அரிசியின் மகத்துவம் என்ன என்று யாராவது இனி கேட்டால்—

"அதோ -- காங்கிரசு அடையும் மன உளைச்சல், பதைபதைப்பு தெரிகிறதா -- அதுதான்"

எனக் காட்டலாம் !

"கெட்டவன் உன்மீது மேலும் மேலும் கோபம் காட்டுகிருன் என்ருல், 'நான் நல்லவன்' என்பதனை நீ சொல்லிக்கொள்ளத் தேவையில்லை; உலகமே உணர்ந்து கொள்ளும்" என்பது ஒரு வழக்கு !

'படி அரிசி' என்ற 'பிடி'யில் மக்கள் எவ்வளவு தூரம் வயப்பட்டு இருக்கிருர்கள் என்பதற்கு, 'நவசக்தி' முயன்று பார்த்துத் தோற்றிருக்கும் எட்டுப் பத்தி 'இருட்டுச் செய்தி' நல்லதோர் எடுத்துக்காட்டு !

அந்த நாளேட்டுக்குச் சொல்லுவோம் நம் நன்றி !

—எஸ். ஆர்.

மாமருந்தாகக் கனிவு தரும் கடிதங்கள்

நெடுஞ்செழியனுக்கு அண்ணா மடல்

அன்புள்ள நெடுஞ்செழியன் அவர்கட்கு, வணக்கம்.

நலம். அங்கு தங்கள் துணைவியாரும், மகனும் நலமென எண்ணுகிறேன். தங்கள் கடிதங்களைப் பெற்று செய்திகளை அறிந்துகொண்டவுடன் உற்சாகம் பெற்றேன்.

எல்லாப் பொறுப்புகளையும், தொல்லைகளையும் உங்கள்மீது போட்டுவிட்டு இங்கு ஒரு திங்களுக்குமேல் இருக்க நேரிட்டுவிட்டது, மனதுக்குச் சங்கடமாகவே உள்ளது என்ருலும், நிலைமை செம்மையாக இருக்கும்விதமாக நீவிர் அனைவரும் அங்கு நற்பணியாற்றி வருவது அறிந்து உற்சாகம் பெறுகிறேன்.

மாநகராட்சி மன்றத் தேர்தலில் கழகம் மகத்தான வெற்றிபெற முனைந்து பாடுபட்டு வருகிறீர்கள் என்பதை உணருகிறேன். என் உடல்நிலை முன்னேறி வருகிறது; என்ருலும், பசியின்மையும், களைப்பும் இருக்கின்றன; ஆகவே, இந்தத் திங்கள் முழுவதும் இங்கு இருக்கும்படி டாக்டர் மில்லர் கூறியுள்ளார்; ஆகவே நான் அங்கு புறப்பட்டு வருவது அநேகமாக நவம்பர் முதல் வாரமாக இருக்கக்கூடும்.

இங்கு இராணி, பரிமளம்,

(4 ம் பக்கம் பார்க்க)

இந்தியத் தலைநகரில் அண்ணா பிறந்த நாள்

தென்னகத் தலைவருக்கு டில்லிவாழ் தமிழ் மக்கள் எடுத்த விழா

வெ. கிருட்டிணமூர்த்தி—செ. கந்தப்பன் சூட்டிய புகழாரம்

இந்தியத் தலைநகரில் பேரறிஞர் அண்ணா அவர்களின் அறுபதாம் ஆண்டு பிறந்த நாள் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது.

அண்ணா பிறந்த நாள் விழாவுக்கென அமைக்கப்பட்ட குழுவினர், டில்லி இராமகிருஷ்ணபுரத்தில் இவ்விழாவினைக் கோலாகலத்துடன் கொண்டாடியிருக்கின்றனர்.

விழாவில், நாடாளுமன்ற உறுப்பினர்களான நெல்லிக்குப்பம் வெ. கிருட்டிணமூர்த்தியும், செ. கந்தப்பனும், அண்ணாவின் அருமை பெருமைகளை டில்லிவாழ் தமிழர்களிடை மிகச் சுவைபட எடுத்துரைத்துப் பேசியிருக்கின்றனர்.

சொற்பொழிவுகளுடன் ஆடல் பாடல் நிகழ்ச்சிகளும் நடைபெற்றிருக்கின்றன.

புதுடில்லி இராமகிருட்டினபுரம் தமிழ்ப் பள்ளியில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 60-வது பிறந்த நாள் விழா—விழாக் குழுவின் சார்பில்—பேராசிரியர் திரு. பா. பாலசுப்பிரமணியம் எம்.ஏ., எம்.லிட். அவர்கள் தலைமையில் சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டது.

தலைவர் முன்னுரையில், அறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சி முறை பற்றியும், தமிழ்த் தொண்டு பற்றியும், சிறப்பு இயல்புகளைப் பற்றியும் குறிப்பிட்டார்.

விழாவிற்கு வருகைபுரிந்தோரை வரவேற்று மாயூரம் மா. நாகப்பன் எம்.ஏ. பேசியதாவது :—

"தோண்டிய இடங்களிலெல்லாம் தங்கம் கிடைப்பது இல்லை; மூழ்கிய இடங்களிலெல்லாம் முத்துக் கிடைப்பதில்லை; காடுகளில் உள்ள மரங்கள் எல்லாம் சந்தன மரங்களாகக் காட்சி அளிப்பது இல்லை; மேடுகளெல்லாம் மேகத்தைத் தாவும் மலைகளாவது இல்லை. அதுபோல, மனித குலத்தில் எங்கோ—எப்போதோதான் சில மாணிக்கங்கள் தோன்றுகின்றன; அப்படித் தோன்றிய மாணிக்கங்கள்தான் ஆபிரகாம் லிங்கன், ரூசோ, பிளாட்டோ, இங்கர்சால், லெனின், கரிபால்டி, புத்தர், இயேசு, நபிகள் நாயகம், காந்தி, கென்னடி போன்றவர்கள்.

"அந்தத் தொடரிலே இந்தத் தலைமுறையிலும் மாணிக்கமாக—மரகதமாக—வைரமாக—வைடூரியமாக—முத்தாக—பவழமாகத் திகழ்பவர் பேரறிஞர் அண்ணா அவர்களாவார்கள்!

"உலகத்தில் பிறந்துவிட்டவர்களையெல்லாம் மனித குலம் பாராட்டுவது இல்லை; பாராட்ட வேண்டியவர்களைப் பாராட்டாது இருப்பதும் மனிதகுலப் பண்பாடு அல்ல. இந்தப் பண்பாட்டினைத் தமிழர் குலம் மறக்கவில்லை—மறக்காது—மறக்கவும் முடியாது என்பதற்கோர் எடுத்துக்காட்டுதான், டில்லியில் கூடியிருக்கும் இந்த மாபெரும் தமிழர் கூட்டம். இன்று உள்ளமெல்லாம் பூரிக்க—உடலெல்லாம் புல்லரிக்க—புளகாங்கிதம் அடைய—அறிஞர் அண்ணா அவர்களின் 60-ம் ஆண்டு பிறந்த நாளினையொட்டி விழா எடுக்கிறோம். தமிழன் தமிழனாகத் தலைநிமிர்ந்து நடக்க—தன்மானத்தோடு வாழ வழிவகை செய்தவர் நமது அண்ணா அவர்களாவார்கள்."

தொடர்ந்து திரு. ஏ. வி. குப்புசாமி, டாக்டர் சத்தியமூர்த்தி ஆகியோர் பேசினர்.

வெ. கிருஷ்ணமூர்த்தி

நாடாளுமன்ற தி. மு. க. உறுப்பினர் திரு. வெ. கிருட்டிணமூர்த்தி பேசியதாவது :—

"அண்ணா தலைமை ஏற்று நடத்துகின்ற ஆட்சியில் தமிழகத்தின் ஆலயங்களில் ஆறுகாலப் பூசை நடைபெறுவதை தடுத்து நிறுத்திவிடவில்லை; கோயில்கள் தகர்க்கப்படவில்லை; பக்தர்கள் மனம் புண்படவில்லை; பாடல் பெற்ற தலங்களில் வழிபாடு பராமரிக்கப்பட்டுக் கொண்டுதான் வருகிறது. எந்த நீதியையும், நியதியையும் 'எடுத்தேன்—கவிழ்த்தேன்' என்கிற பாணியில் தி. மு. க. அரசு கெடுத்துவிடவில்லை என்பதை உலகம் புரிந்துகொண்டது!

பேரறிஞர் அண்ணாவின் அன்பு தமிழர்கள் மீதும், தென்னாட்டவர்கள் மீதும்—அவர்கள் எங்கிருந்தாலும் உண்டு.

தமிழர்களுக்கோ, தென்னாட்டவர்களுக்கோ துன்பம்—துயரம் என்றால், அண்ணா அவர்களால் தாங்கிக்கொள்ள இயலாது.

பம்பாயில் சிவசேனையின் கொடுமைக்குத் தமிழர்களும், மலையாளிகளும், ஆந்திரர்களும், கன்னடர்களும் ஆளான நேரத்தில், என்னை அங்கே அனுப்பி, 'நிலைமையைத் தெரிந்துகொண்டு வா' என்று சொன்னார்கள். மாதுங்காவில்—தாராவியில்—செம்பூரில் வாடும் நமது மக்களைக் கண்டு நிலைமையறிந்து ஆறுதல் கூறிவந்தேன். அங்கு நடக்கும் கொடுமைகளைச் சவாணுக்கும் எடுத்துக் கூறி, 'உடனே பரிகாரம் தந்திட வேண்டும்' என்று கழகத்தின் சார்பாக எடுத்துச் சொன்னேன். அந்தப் பகுதியிலே இருக்கும் சிவசேனை அராஜகச் செயல்களை நிறுத்திக்கொள்ளட்டும். நமக்கு எங்கு வாழ்ந்தாலும் சமவுரிமை வேண்டும்.

உண்மையிலேயே ஒற்றுமையை வளர்க்க விரும்பினால் நமது உரிமையை நமக்கு வழங்கட்டும்!"

செ. கந்தப்பன்

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. செ. கந்தப்பன் அவர்கள் பேசியதாவது :—

"அண்ணாவின் சிறப்பு, அவருக்கிருக்கின்ற நிலை பிறழாத பொறுப்பு உணர்ச்சியாகும். 'அண்ணா ஆட்சிபீடமேறியது முதல் இன்றுவரை மாறாத அமைதியோடும், ஆற்றலோடும் அரசியல் நாகரீகத்தோடும் நடந்துகொண்டார்' என்ற புகழாரத்திற்குரிய சிறப்பாகும்.

அண்ணா ஆட்சிப்பீடமேறியதிலிருந்து மட்டுமல்ல—அவர் அரசியலில் காலடி எடுத்து வைத்த நாளிலிருந்தே சுமார் 40 ஆண்டுக்காலமாக அரசியல் நாகரீகத்தைக் கடைப்பிடித்து வருகிறார் என்பதை நாடே மெல்ல மெல்லப் புரிந்துகொண்டு வருகிறது; வெளி உலகமும் அதைப் புரிந்துகொள்ள முயலுகிறது.

"செங்கோட்டையிலே நடக்கும் வல்லபாய் பட்டேல் நினைவு விழாவிற்கு இந்த ஆண்டு அண்ணாவையே அழைத்துத் தலைமை தாங்கச் செய்ய வேண்டும் என்று விழாக் குழுவினர் ஒருமனதாக முடிவு செய்தார்கள்" என்று கான் வார்லால் குப்தா எம்.பி., அவர்கள் என்னிடத்திலே சொன்னார், 'அமெரிக்காவிலிருந்து வருகிற அண்ணாவை நேரே டில்லிக்கே அழைத்து தலைமை தாங்கச் செய்யவேண்டும் என்ற ஆவலோடு விழாக்குழுவினர் இருக்கிறார்கள்' என்றும் அவர் என்னிடத்திலே எடுத்துச் சொன்னார்.

"'அரசியல் மேதை அண்ணாதான்' என்கிற சிறப்பை, அகில இந்தியாவும் ஏற்றுக்கொண்டதைக் காட்டுகின்ற நிகழ்ச்சி இதுவாகும்!

இந்திக்கு எதிராக 1965-ல் நடந்த போராட்டத்தையும், அதைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சிகளையும் நாடே நன்கு அறியும். அன்றைய ஆட்சியாளர்கள் கடைபிடித்த தவறான கொள்கைகள் இத்தனை இன்னல்களையும், அமைதியின்மையையும் தமிழகமெங்கும் என்றில்லாமல் தென்னகத்தின் பல பகுதிகளுக்கும் பரப்பியது என்பதை நாமறிவோம். அத்தனைக் குழப்பங்களுக்கும் கலவரங்களுக்குமிடையிலும், அங்கே (தமிழகத்தில்) இருந்த வடநாட்டுக்காரர்களில்—மார்வாடிகளில்—மற்ற மொழியினர்களில் ஒருவர்கூட இன்னல்களுக்கு ஆளாகவில்லை; தொல்லை—துயரம்படவில்லை; உடைமைகளுக்குரிய அவர்கள், உறவினரைப்போல்—நண்பர்களைப்போல் பாதுகாக்கப்பட்டார்கள்; இது—அண்ணா வளர்த்த அரசியல் பண்பாடாகும்; நாகரீகமாகும்; இது—தமிழர்களுக்குரிய சிறப்பு; தமிழக அரசியல் மேதை தந்த தத்துவச் சிறப்பு.

தமிழகம் கொந்தளித்திருந்த அந்த நேரத்தில், மராட்டிய மாநிலத்திலிருந்து வந்து இராமேசுவரம் கோயிலில் பூசாரிகளாக இருப்போர் உட்பட மற்ற மொழியினர் அத்தனைப் பேருடைய உயிரும், உடைமையும் பாதுகாக்கப்பட்டன என்பது, சிவசேனைக்காரர்களுக்குக்கூடத் தெரிந்திருக்கவேண்டும். அவ்வளவு சிறந்த அரசியல் பண்பாட்டை அண்ணா அவர்கள் தமிழகத்திலே வளர்த்திருக்கிறார்கள். இதை இந்தியத் துணைகண்டத்திலே இருக்கிற அத்தனைப் பேரும் இன்றைக்காவது புரிந்துகொள்ளட்டும்!

'பிரிவினை வேண்டும்' என்கிற உணர்வும், 'பிரிக்க வேண்டும்' என்கிற துடிப்பும் அண்ணாவுக்கோ, அவர் வழி நடக்கின்ற கழகத்துக்கோ இன்றைக்கும் உண்டு—என்று சொல்லித் திரிகின்ற அரசியல் அங்காடிகளுக்கு, 1968-ம் ஆண்டுத் துவக்கத்தில் நடந்த தமிழகச் சட்டமன்றச் சிறப்புக் கூட்டத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அந்தச் சிறப்புக் கூட்டத்தில், 'இரு மொழி போதும்; இந்தி வேண்டாம்' என்ற தீர்மானத்தை நிறைவேற்றிய நேரத்தில், 'எதிர்க்க வேண்டும்' என்கிற நினைப்புள்ள சிலர்கூட அதை எதிர்க்க முன்வரவில்லை; 'இந்தி வேண்டும்' என்று சொல்லுகின்ற அளவுக்கு எவருக்கும் துணிவு வரவில்லை; அந்த நேரத்தில், அண்ணா சொன்ன சொல் சட்டமாயிற்று! 'இந்தியை எதிர்க்கிறேன்' என்று அண்ணா சொன்னதும், எதை வேண்டுமானாலும் செய்' என்றது தமிழகம்! அந்த அருமையான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, 'தமிழ்நாட்டைத் தனியே பிரித்துக் கொடு' என்று ஒரு தீர்மானத்தைப் போட்டிருந்தால், ஒருமனதாக நிறைவேற்றிக் கொண்டிருக்க முடியும்; ஆனாலும், பரந்த நோக்கமும், சிறந்த அரசியல் தெளிவும், 'சமவுரிமையோடு இணைந்து இந்தத் துணைக்கண்டத்தில் வாழ்வோம்' என்கிற அரசியல் நாகரீகமும் கொண்ட அறிஞர் அண்ணா அவர்கள் அப்படிச் செய்யவில்லை! ஒரு சந்தர்ப்பவாதியாக மாறிவிடாமல், பெரிய அரசியல் நியதியை—மிகப் பெரிய கொந்தளிப்புக்கிடையிலேயும் கடைபிடித்தார்!

'இணைந்து வாழ்வோம்' என்பதே இன்றையக் கொள்கை. அதே நேரத்தில், 'பிரிவினை உணர்ச்சி ஏன்? எப்பொழுது தோன்றியது?' என்பதையும் நினைவுபடுத்திக்கொண்டால் நல்லது.

'சமவுரிமை வழங்காத காரணத்தால்தான் பிரிவினை உணர்வே தோன்றியது' என்று இராசகோபாலாச்சாரி அவர்களே கூறியிருக்கிறார்; அவர் சொல்லுவதில் அரசியல் தெளிவு இருக்கிறது; அதை நீங்களோ, நாங்களோ மறந்துவிட வேண்டியதில்லை.

சமவுரிமையை மறந்துவிடுவது நாட்டிற்கும், நாட்டின் நலத்திற்கும் நல்லதல்ல!

அண்ணா ஓர் அரசியல் மேதை மட்டுமல்ல—அவர் ஒரு மறுமலர்ச்சிக்காரர். சமுதாயச் சீர்திருத்தக்காரர்; பேராசிரியர்; வழிகாட்டி!

அவருடைய இலக்கியப் படைப்புகள்—எழுத்துக் குவியல்கள், தமிழர்களுக்குக் கிடைத்த கருவூலங்களாகும். மொழியையும், பண்பாட்டையும், நாகரீகத்தையும் பாதுகாப்பதே அவருடைய இலட்சியங்களாகும்.

எங்கிருந்தாலும் நமது தனித்தன்மையை இழந்துவிடாமல், அதே நேரத்தில் மற்றவர்களோடு இணைந்து வாழ்வதுமே நமக்கும், அண்ணா அவர்களுக்கும் செய்யும் சிறப்பாகும்.

தமிழ்நாட்டைவிட்டு நெடுந்தொலைவு வந்துவிட்டதால், ஏதோ நாம் மற்றவர்களின் தயவுடன்தான் வாழவேண்டும் என்று எண்ணத் தேவையில்லை! 'இந்த மண்ணுக்குச் சொந்தக்காரர்கள், அந்த மண்ணுக்கும் சொந்தக்காரர்கள்' என்ற புதுச் சித்தாந்தத்தை சிவசேனைக்காரர்களும், மற்ற வெறி உணர்வு

(3-ம் பக்கம் பார்க்க)

'சாதனை'களைக் கேட்கும் சி. சுப்பிரமணியத்துக்கு!

அமைச்சர் மு. கருணாநிதி காட்டும் பட்டியல்

சென்னை, அக். 19—

"மாநகராட்சியில், தி. மு. கழக நிர்வாகம் என்ன சாதித்துவிட்டது" என்று கேட்டுப் பேசிவரும் சி. சுப்பிரமணியத்திற்குப் பதில் தரும் வகையில், திரு. மு கருணாநிதி அவர்கள் சுட்டிக்காட்டியதாவது :—

★ கழகம் மாநகராட்சிப் பொறுப்பை ஏற்பதற்குமுன், மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி ஒன்றுதான் இருந்தது; கழகம் பொறுப்பேற்ற பிறகு, இந்த ஒன்பது ஆண்டுகளில் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் இருபத்தொன்றாக மாறியிருக்கின்றன—இது சாதனை அல்லவா?

★ 1958-ம் ஆண்டில் இருந்ததைவிட, இப்போது பதினைந்து மடங்கு விளக்குகள் நகர் முழுவதும் அமைக்கப்பட்டிருக்கின்றன—இது சாதனை அல்லவா?

★ திருமணம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்த வசதியற்றிருந்தனர் ஏழை மக்கள்; அவர்களால், நான் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வாடகை என்றுள்ள ஆபட்ஸ்பரி மாளிகையில் திருமணம் நடத்த முடியாது; அதற்காக மாநகராட்சி, திருமண மண்டபங்களை அமைத்து ஏழை எளியவர்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் வசதி செய்துள்ளது—இது சாதனை அல்லவா?

★ ஏழை எளிய குடும்பத்தைச் சார்ந்த தாய்மார்கள் வேலைக்குச் செல்லும்போது, அவர்களது குழந்தைகளை வீட்டில் விட்டுவிட்டுச் செல்லவேண்டிய நிலை இருந்தது; மாநகராட்சி, குழந்தை—நல விடுதிகளை அமைத்து, அந்தக் குழந்தைகளைப் பேணி வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது; இத்தகைய குழந்தைகள் நல விடுதிகள் இதுவரையில் ஏழு இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன; இன்றுகூட ஒரு விடுதிக்கு அடிக்கல் நாட்டினேன்; தி. மு. கழகத்திற்கு இந்த முறையும் வாய்ப்பும் ஆதரவும் தருவீர்களானால், இன்னும் இரண்டே ஆண்டுகளில், 120 வட்டங்களிலும்—வட்டத்திற்கு ஒரு குழந்தைகள் நல விடுதியை அமைத்துத் தரும்—இது சாதனை அல்லவா?

★ எந்த நகராட்சியிலும் இல்லாத முறையில் பள்ளிகளில் படிக்கும் பிள்ளைகளுக்கு ரூ. 6 இலட்சம் செலவில் இலவசப் புத்தகங்களைத் தந்தது சென்னை மாநகராட்சி அல்லவா?

★ இன்றையத்தினம் முதல் வகுப்பிலிருந்து எட்டாவது வகுப்பு வரை படிக்கும் சிறுவர்களுக்குப் புத்தகங்கள்—எழுது பொருட்கள்—கற்பலகை ஆகியவற்றை ரூ. 9 இலட்சம் செலவில் தருவது தி. மு. கழகத்தின் நிர்வாகத்தில் உள்ள மாநகராட்சி அல்லவா?

இத்தகைய மாநகராட்சிச் சாதனைகளுக்கு, 1967 வரை இம்மாநிலத்தை ஆண்ட காங்கிரசு ஆட்சி உறுதுணையாக இருந்ததா? கை கொடுத்து உதவியதா?

கூவம் சீர்திருத்தத்திற்கு மாநகராட்சி திட்டம் தீட்டித் தந்தால் அதைக் குப்பைக் கூடைக்கு அனுப்பியது காங்கிரசு ஆட்சி! காவிரி நீர்த் திட்டத்தைத் தந்தால் அதை ஏற்க மறுத்தது காங்கிரசு ஆட்சி! இந்தத் திட்டங்களுக்கு ஒப்புதல் தந்துவிட்டால், தி. மு கழக மேயருக்குப் பெயர் வந்துவிடுமே' என்ற பரந்த எண்ணம்தான் இதற்கெல்லாம் காரணம்!

அத்தகைய ஆட்சி மறைந்து, மேலேயும் கழக ஆட்சி—மாநகராட்சியிலும் கழகம்' என்ற நிலை தோன்றியிருக்கிறது!

ஆகவே, மாநில ஆட்சியிலும் மாநகராட்சியிலும் மக்களுக்கு நன்மை செய்வதையே குறிக்கோளாகக் கொண்ட ஒரே கட்சி இருப்பதுதான் சிறந்தது என்பதை அறிந்து, அனைவரும் கழகத்திற்கும், தோழமைக் கட்சிகளுக்கும் இந்தத் தேர்தலில் பேராதரவு தந்திட வேண்டுகிறேன்."

இருபோகச் சாகுபடிக்கு வரி விலக்கு

தமிழக அரசு நடவடிக்கை

தஞ்சை, அக். 18—

"வழக்கமாக ஒரு போகம் சம்பாப் பயிர் சாகுபடி செய்து வந்த நிலங்களில் இரு போகச் சாகுபடி செய்திருந்தால், அந் நிலங்களுக்குத் தண்ணீர் வரியை வசூலிக்காதிருக்குமாறு தமிழக அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

இவ்வாணை பசலி 1377-க்கும் (கடந்த ஆண்டிற்கும்) பொருந்தும்.

"குறுகிய காலப் பயிர் சாகுபடி செய்து பின்னர் இரண்டாவது போகம் சாகுபடி செய்திருக்கும் நிலங்களுக்கும் இது பொருந்தும்" என்று அரசு தெளிவுபடுத்தியிருக்கிறது.

"பயிரின் காலத்தைக் கவனியாமல் ஒன்றுபோல் இந்தச் சலுகை அளிக்கவேண்டும்" என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொண்டதன் பேரில் அரசு இப்போது உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

இந்த ஆண்டு குறுகிய காலப் பயிர்களுக்குப்பின், நடுத்தர காலப் பயிர்களுக்கு (இரு போக சாகுபடி) மட்டுமே இச்சலுகை அளிக்கப்படுகிறது.

இந்தியத் தலைநகரில்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டோரும் உண்டாக்க முயற்சிப்பதைக் கண்டு நாம் அஞ்சத் தேவையில்லை.

நமது உரிமையையும், உணர்வையும் எடுத்துச்சொல்ல அறிஞர் அண்ணா அவர்கள் எப்பொழுதும் தயங்கமாட்டார்கள்! எனவே, நமது பரந்த நோக்கத்தோடு பயமில்லாமல் நமது தனிச் சிறப்புக்களைக் கடைபிடித்துவருவோம்!

மலர் இங்கே இருக்கிறது என்பதை, அதன் மணம் காட்டிவிடும்; அதுபோல், தமிழர்கள் எங்கிருந்தாலும் தங்களுக்குரிய சிறப்போடு இருக்கிறார்கள்—என்றிருக்க வேண்டும்.

இசைக்கு விழா எடுப்பதும், மொழிக்கு விழா எடுப்பதும் நமக்கே உரிய சிறப்புக்கள்! நமக்குரிய பண்பாடுகள் -- சிறப்புக்கள் -- இங்கே இராம கிருஷ்ணபுரத்திற்கு வந்தால் தெரிந்துகொள்ள முடிகிறது!

கோயில் இருப்பதும், அங்கே வழிபாடு நடப்பதும், அதற்கே உரித்தான சீரும் சிறப்பும் இருப்பதும் இந்தப் பகுதிக்கு வந்தால் தான் புரிந்துகொள்ள முடிகிறது!

டில்லியின் பல பகுதிகளிலும் வட நாட்டவர் கோயில்களில் இருக்கும் பெயர் பலகைகளைப் பார்த்து இடத்தைத் தேடினால் தான், 'ஓகோ! இங்கே கோவில் இருக்கிறது போலும்!' என்று தெரிந்துகொள்ள முடிகிறது!

தமிழர்களின் ஆலயச் சிறப்பும், ஆலய வழிபாடு மட்டும் அவர்களை உயர்த்திக் காட்டிடவில்லை; அவர்களுக்குரிய பரந்த நோக்கங்களும், உயர்ந்த எண்ணங்களும், தொன்மையான மொழியும் பண்பும், பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியவைகளாகும்! அதுவே அண்ணாவுக்கும், அவர்தம் இலட்சியங்களுக்கும் நாம் கொடுக்கும் விழாக்களாகும்!"

சொற்பொழிவுகளுக்குப் பிறகு நடன ஆசிரியர் கீரனூர் கோவிந்தராசன்—மாதுரி செயராமன் ஆகியோரின் இன்னிசை விருந்தும் குமாரி கமலினி நாகராசன் அவர்களின் பரத நாட்டியமும், குமாரி இராதா—குமாரி காமினி ஆகியோரின் குறவன்—குறத்தி நடனமும் நடைபெற்றன.

தலைவர் முடிவுரையின் பொழுது, அண்ணாவிற்கு அறுவை சிகிச்சை செய்த டாக்டர் மில்லர் அவர்களுக்கு அண்ணா விழாக் குழுவினரின் சார்பிலும், குழுமியிருந்த தமிழர்கள் சார்பிலும் வாழ்த்தும், நன்றியும் கூற கூட்டம் இனிது முடிவடைந்தது.

கரும்பு விவசாயிகட்கு உதவத் தமிழக அரசின் திட்டம்

வறட்சிப் பகுதிகளில் கிணறுகள் வெட்ட ரூ. 112 இலட்சம்

சென்னை, அக். 18—

தமிழகத்தில் கரும்பு பயிராகும் பகுதிகளில் கிணறு வெட்டும் சிறப்புத் திட்டத்தை நிறைவேற்றுவது பற்றித் தமிழக அரசு பரிசீலனை நடத்திவருகிறது.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ரூ. 112 இலட்சம் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கரும்புச் சாகுபடிக்குக் கிணற்றுப் பாசனத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் விவசாயிகளுக்கும், பாறைகள் அதிகமாகவும் தண்ணீர் மிகவும் ஆழத்திலும் உள்ள பகுதிகளில் கரும்புப் பயிர் செய்யும் விவசாயிகளுக்கும் இந்தத் திட்டத்தின் மூலமாகக் கடன் உதவி அளிக்கப்படும்.

இந்தத் திட்டத்தின்படி, 500 கிணறுகள் தோண்டப்படும்.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால், கரும்புச் சாகுபடி தீவிரமாக நடைபெறுவதற்கு உதவியாக இருக்கும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

வறட்சியால் கரும்புப் பயிர் பாதிக்கப்படுவதால், கிணறுகள் தோண்டும் திட்டத்தின் மூலம் கரும்புச் சாகுபடியைத் தீவிரமாக நடத்த உததேசிக்கப்பட்டுள்ளது.

மாநில வேளாண்மைத் துறையைச் சேர்ந்த ஓர் அதிகாரி பின்வருமாறு கூறினார்:—

"வறட்சி காரணமாக சுமார் 10,000 ஏக்கரா கரும்புப் பயிர் பாதிக்கப்பட்டுள்ளது.

"கோவை, சேலம், வட ஆற்காடு, தருமபுரி முதலிய மாவட்டங்களில் வறட்சி காரணமாகக் கரும்புப் பயிர் கடுமையாகப் பாதிக்கப்பட்டது; அங்கு பயிர்கள், மழையைத்தான் நம்பிக் கொண்டிருக்கின்றன.

"கரும்பு நாற்றுக்கள் வறட்சி காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டன. அவற்றை வெட்டி கால்நடைகளுக்குப் போட வேண்டியதாயிற்று.

"கரும்புக்கு இந்திய அரசு அதிக விலை நிர்ணயித்ததால், கரும்புச் சாகுபடியை விரிவாக்க முடிந்தது; ஆகவே மொத்தத்தில் கரும்பு உற்பத்தி பாதிக்கப்பட மாட்டாது.

"சென்ற ஆண்டு 9.2 இலட்சம் டன் கரும்பு உற்பத்தியாயிற்று; இந்த ஆண்டில் இது 5 சதம் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது."

அதிகாரிக்கே தெரியாத அலுவலர்கள்

வேலை செய்யாமலே மாதந்தோறும் ஊதியம் பெறும் விந்தை!

கல்கத்தா, அக். 18—

கல்கத்தா மாநகராட்சி மன்றத்தில் எத்தனை பேர் வேலை பார்க்கிறார்கள் என்று தொடர்புடைய அதிகாரிகளுக்கே தெரியவில்லையாம்!

மாநகராட்சியின் புதிய ஆணையராக திரு. சென்குப்தா என்னும் அதிகாரி பதவி ஏற்றவுடன், அந்தந்தத் துறைகளின் தலைமை அதிகாரிகளை அழைத்து, 'ஒவ்வொரு துறையிலும் எத்தனை பேர் வேலை பார்க்கிறார்கள் ?' என்று கேட்டாராம்; ஒருவரும் சரியான பதில் சொல்லவில்லையாம்.

பிறகு அவர், 'ஒரு வார காலத்திற்குள் இதற்குப் பதில் தந்தாக வேண்டும்' என்று கட்டளையிட்டிருக்கிறார்.

ஒரு வாரம் முடிந்தும் எவ்வித பதிலும் கிடைக்கவில்லையாம்.

எனவே, ஆணையர் இப்போது புதிய ஆணை ஒன்றைப் பிறப்பித்துள்ளார்.

ஒவ்வொரு ஊழியரும், தம் ஊதியத்தை நேரில் வந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே அந்த ஆணை.

இதுவரை, மாநகராட்சி ஊழியர்கள் வேறு ஆள் மூலம் பெறுவதுதான் வழக்கமாக இருந்து வந்தது.

'போலி' ஊழியர்களைக் கண்டுபிடிக்கும் நோக்கத்துடனேயே மேற்கண்ட ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

கல்கத்தா மாநகராட்சி மன்றத்தில் ஏராளமான எண்ணிக்கையில் போலி' ஊழியர்கள் இருக்கக்கூடும் என்று ஆணையர் சென்குப்தா தெரிவித்துள்ளார்.

மாநகராட்சியில் வேலையே பார்க்காதவர்களின் பெயர்களும், போலிப் பெயர்களும், சம்பளப் பட்டியலில் நெடுநாளாக இருந்து வருகிறது என்பது இப்போது தான் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது!

பண்டிகை நாளே சிசர்ஸை சுவைத்திடும் திருநாள்



S 4726

இன்றே சேருங்கள்!

'முகச்சாயலை பார்த்து நட்சத்திரங்களின் பெயர்களைக் கூறும்' சிசர்ஸ் போட்டி

போட்டி பாரங்கள் சிகரெட் கடைகளில் கிடைக்கும்

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

20--10--68

சென்னை 9-வது வட்டம்

கழக வேட்பாளர் வி. எஸ். ஆனந்தனை ஆதரித்து இரவு 8-மணிக்கு மீனாட்சியம்மன் பேட்டை தொப்பைமுதலி தெருவில்; தலைவர்: அ. நல்லதம்பி; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், க. அறிவழகன் எம்.எல்.சி., பீர் முகம்மது எம்.எல்.ஏ., மு. வேதாசலம் எம்.எல்.ஏ., பொன்னுரங்கம், ஜோசப், பீ. ஜப்பார்.

சென்னை 30-வது வட்டம்

தி. மு. க. வேட்பாளர் அரு. சக்கரபாணியை ஆதரித்து இரவு 8-மணிக்கு முல்லா சாகிப் தெருவில்; தலைவர்: வி. எஸ். செயராமன்; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், எஸ். எஸ். மாரிசாமி எம்.பி., வி. பி. சிந்தன், எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., குசேலர் எம்.பி.

சென்னை 91-வது வட்டம்

கே. ஆர். ஆர். படிப்பகச் சார்பில் கழக வேட்பாளர் எஸ். வி. வேலுவை ஆதரித்து மாலை 7-மணிக்கு கணேசபுரம பாலகிருஷ்ண ரோடில்; தலைவர்: ஆர். சி. கே. சாமி; பேசுவோர்: அமைச்சர் சத்தியவாணி முத்து, இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., முரசொலி மாறன் எம்.பி., ஜி. குசேலர் எம்.பி., மயிலை மாறன், எம். கே. கபாலி, டி. கோவிந்தன், எஸ். துலுக்காணம், மு. சீனிவாசன், வி. அருள்முகம், மாலதி சீனிவாசன், டி. அரங்கநாதன், ஆர். சி. ஆறுமுகம், மற்றும் பலர்.

சென்னை 95-வது வட்டம்

சுதந்தராக் கட்சி வேட்பாளர் எஸ். கே. சீனிவாசனை ஆதரித்து மாலை 7-மணிக்கு டி. எஸ். வி. கோயில் தெருவில்; தலைவர்: கே. இராமலிங்கம்; பேசுவோர்: அமைச்சர் கே. ஏ. மதியழகன், டி. கே. சீனிவாசன், எஸ். எஸ். மாரிசாமி, ஆ. க. அ. அப்துஸ் சமது எம்.பி., இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., நடிகர் கே. கண்ணன், டி. தம்பித்துரை, ச. சிவானந்தம், பி. கே. அமரன், கே. எஸ். பிரகாசம், வி. சீனிவாசன்.

புதுக்கோட்டை

எம். ஜி. ஆர். மன்றத் திறப்பு விழா; மாலை 6-மணிக்கு திருவள்ளுவர் நகரில்; தலைவர்: மீ. ந. அ. செ. முகம்மது இஸ்மாயில்; திறப்பாளர்: பி. எஸ். கருப்பையா; பேசுவோர்: நன்னிலம் நடராசன், மு. இயலரசன், திருமதி சந்திரா இயலரசன், எம். எஸ். அபதுல் மஜீத் எம்.சி., எஸ். இரங்கசாமி, பா. செழியன், க. சிங்கமுத்து, அய்யாக்கண்ணு, எஸ். கருப்பையா. (மதுரை தங்கராசு–கண்ணம்மா கலை நிகழ்ச்சி நடைபெறும்).

21--10--68

சென்னை 54-வது வட்டம்

கழக ஆதரவு பெற்ற வேட்பாளர் பி. இ. பக்தவத்சலத்தை ஆதரித்து இரவு 8 மணிக்கு; தலைவர்: சி. சுப்பிரமணியம்; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், ஏ. எஸ். கே. ஐயங்கார், கேரளீயன், மற்றும் பலர்.

சென்னை 28-வது வட்டம்

கழக வேட்பாளர் என்.வி.என். சோமுவை ஆதரித்து எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு சிவஞானம் பூங்கா அருகில்; தலைவர்: சி. அ. இரத்தினம்; பேசுவோர்: கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், வேளாண்மை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., கே. எஸ். கிருஷ்ணசாமி, எஸ். வி. எஸ். மணி, வேலாயுதம்.

சென்னை 93-வது வட்டம்

கழக வேட்பாளர் கே. கோவிந்தசாமியை ஆதரித்து, மாலை 7 மணிக்கு சைலாசபுரம் தமிழ் இலக்கிய மன்றத்தில்; தலைவர்: சாலேமான் தர்மராசு; பேசுவார்: அமைச்சர் சத்தியவாணிமுத்து, அரங்கண்ணல் எம்.எல்.ஏ., இளம்பரிதி, எம். நாகப்பன், கைலை மணி.

சவுரியூர்

எம். ஜி. ஆர். மன்றத் துவக்க விழா; மாலை 6-மணிக்கு ஆரம்பப் பள்ளி எதிரில்; தலைவர்: அ. பழனியப்பன்; பேசுவோர்: வி. கன்னியப்பன், அ. பாலு, மா. நடராசன், எம். ஆர். சேகர்.

22--10--68

சென்னை 49-வது வட்டம்

கழக வேட்பாளர் சு. பாலனை ஆதரித்து இரவு 8-மணிக்கு பாரக்ஸ் கேட் தெருவில் (பட்டாளம் மணிக் கூண்டு அருகில்); தலைவர்: எம். தங்கவேலு அனந்தர்; பேசுவோர்: பொதுப் பணி அமைச்சர் மு. கருணாநிதி, செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, தென்காசி கதிரவன் எம்.எல்.ஏ., மு. கிருட்டினன், ந. சீனிவாசன், மாப்ராசன், தாமரைச்செல்வன், மற்றும் பலர்.

சென்னை 93-வது வட்டம்

கழக வேட்பாளரை ஆதரித்து மாலை 7 மணிக்கு நொச்சிக்குப்பம் எஸ். எஸ். ஆர். மன்றம் அருகில்; தலைவர்: சி. ஜே. ஜெகநாதன்; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், முரசொலி மாறன் எம்.பி., வேதாசலம் எம்.எல்.ஏ., எம். நாகப்பன், துரைக்கண்ணு.

தேர்தல் பிரச்சார ஊர்வலம்

சென்னை 30-வது வட்டக் கழக வேட்பாளர் அரு. சக்கரபாணியை ஆதரித்து 22—10—68 மாலை 6 மணிக்கு, பெருமாள் கோயில் தோட்டம் முதல் சந்து 50-எண்ணுள்ள தேர்தல் அலுவலகத்திலிருந்து எம். ஆர். சந்திரன் தலைமையில் ஊர்வலம் புறப்படும்.

காமராசரின் விசித்திர...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எங்கள் வழிகாட்டி—இதய தெய்வம்—தமிழுக்காகவே வாழுகிற தலைவரை — அண்ணாவைக் காட்டி ஓட்டுக் கேட்கக் கூடாதாம்!

தொண்டர்களை உற்சாகப்படுத்தும் வகையிலும்—மதிப்பளிக்கும் வகையிலும் 'அண்ணன் மனம் மகிழ' என்று கேட்டுக் கொள்ளக் கூடாதா? இது அற்பத்தனமா?

எப்படி நம்புவது இவர்களை?

நிஜலிங்கப்பாவும் சி. சுப்பிரமணியமும் பேசுவது அற்பத்தனமா? நாங்கள் பேசுவது அற்பத்தனமா?

மேயர் அறையில் இருந்த அண்ணா படத்தை தங்கள் கட்சி மேயரைக் கொண்டு அப்புறப்படுத்தச் செய்தவர்கள் தானே இந்தக் காங்கிரசார்!

'நாங்கள் வந்தால் அண்ணா படத்தை எடுக்கமாட்டோம்' என்று இப்போது பேசுகிறார்கள்!

அண்ணா சிலை முன்னால் காங்கிரசுக்காரர்கள், கறுப்புத் துணி எறிந்ததைக் கண்டித்தாரா சுப்பிரமணியம்? அப்படிக் கண்டித்திருந்தால் அவரை நம்பலாம்!

சென்னையில் படி அரிசி கொடுப்பதைப் பற்றித் தென்காசியில் சென்று தவறான வகையில், 'மேனாமினுக்கிகள் --- சோம்பேறிகள் -- சினிமாக்காரர்கள் ஆகியோருக்குப் படி அரிசி கொடுக்கிறார்கள்' என்று பிரச்சாரம் செய்யவில்லையா?

குறுகிய காலத்தில் அண்ணா சாதித்த சாதனைகள்!

அண்ணா அவர்கள் உலகத்தில் எந்தத் தலைவரும் வளர்க்க முடியாத அரசியல் பாரம்பரியத்தை வளர்த்திருக்கிறார்!

ஆப்ரகாம்லிங்கன்—லெனின்—ஸ்டாலின்—முதலிய எந்தத் தலைவரும் சாதிக்க முடியாததை அண்ணா அவர்கள் குறுகிய காலத்தில் சாதித்திருக்கிறார்!

இந்தத் தேர்தல் நேரத்தில் அண்ணா அவர்கள் இங்கு இல்லை; ஆகவே எல்லோரும் தங்களையே அண்ணாவாக நினைத்து -- சுறுசுறுப்பாக உழைத்து -- வெற்றிக்கு உழைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்."

****

தலைமைக் கழக அறிக்கை எண்: 2/68

ஒழுங்கு நடவடிக்கை

கழகச் சட்டதிட்டங்களுக்கு முரணாகவும், கழகக் கட்டுப்பாட்டினைச் சீர்குலைக்கும் வகையிலும், தவற்றிலிருந்து திருத்திக் கொள்வதற்குத் தலைமைக் கழகம் கொடுத்த வாய்ப்புக்களைப் புறக்கணித்தும், சென்னை மாநகராட்சித் தேர்தலில் கழக வேட்பாளர்களை எதிர்த்துச் சுயேச்சையாகப் போட்டியிடும் கீழ்க்காணும் கழக உறுப்பினர்கள் மீது கழகச் சட்டதிட்டம்—விதி 31 -- பிரிவு 12-இன்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

கீழ்க்காணும் தோழர்கள், கழகத்தின் சாதாரண உறுப்பினர் பொறுப்பிலிருந்தும், மற்றும் கழக அமைப்புக்களில் அவரவர் வகிக்கும் நிர்வாகப் பொறுப்புக்களிலிருந்தும் இன்று முதல் ஐந்து ஆண்டுக் காலத்திற்கு அறவே நீக்கப்படுகிறார்கள் என்பது, இதன்மூலம் அறிவித்துக்கொள்ளப்படுகிறது.

வட்டம்	பெயர்
7	வி. ஆறுமுகம்
35	மா. கோ. பாபு
99	ஜி. முனுசாமி
109	எஸ். நாராயணன்
115	க. செல்வராசு
117	தேவராசன்
119	எம். எஸ். இராகவலு

'அறிவகம்', சென்னை-13
18—10—68

இரா. நெடுஞ்செழியன்
(பொதுச்செயலாளருக்காக)

குறிப்பு: நேற்று வெளியிடப்பட்ட இதே அறிக்கையில் தோழர் எஸ். நாராயணன் என்பவர் 105-வது வட்டத்தில் போட்டியிடுவதாகக் குறிப்பிட்டிருந்ததைத் திருத்தி, அவர் 109-வது வட்டத்தில் போட்டியிடுவதாக அறிவிக்கப்படுகிறது.

விஷமப் பிரசாரத்தை நம்பாதீர்!

படி அரிசித் திட்டம் கைவிடப்படமாட்டாது

'அரிசித் தட்டுப்பாடு ஏற்படுமோ என அஞ்ச வேண்டாம்'— தமிழக மக்களுக்கு அமைச்சர் கே. ஏ. மதியழகன் தரும் உறுதி

சென்னை, அக். 19—

"அரசியல் காரணமாகவோ, அல்லது வேறு உள்நோக்கத்துடனோ, 'அரிசி கையிருப்பு இல்லை' என்று கூறி மக்களிடையே பீதி கிளப்புவதாக எந்த வியாபாரி மீதாவது புகார் வந்தால், அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

"எல்லாப் பங்கீட்டுக் கடைகளிலும் போதிய அளவு அரிசி கையிருப்பு இருக்கிறது; தேவையான அரிசி தங்கு தடையின்றி வழங்கப்பட்டு வருகிறது; சில்லறை விற்பனையாளர்கள் சிலர், வேண்டுமென்றே அரிசித் தட்டுப்பாடு உண்டாக்க முயற்சிக்கின்றனர்; அவர்கள் கையாளும் தந்திரங்கள் -- தாமதங்கள் காரணமாகப் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுமானால் --- அல்லது உணவு நிலைமை பற்றி தவறான கருத்து மனதில் ஏற்படும்படி அவர்கள் நடந்துகொண்டால், உடனடியாக அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

"எந்த ரேஷன் கடைக்காரராவது 'அரிசி கையிருப்பில்லை' என்று கூறினாலோ, அல்லது பங்கீட்டுக் கார்டுகளுக்கு அரிசி தர மறுத்தாலோ, அதிகாரிகளுக்கு உடனே தகவல் தெரிவித்தால், உடனே அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்; புகார் கூறப்படும் ரேஷன் கடைக்காரரின் லைசென்சைப் பறிமுதல் செய்வது உட்பட அவர்கள்மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்''

என்று உணவுத் துறை அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள் செய்தியாளர்களிடம் திட்டவட்டமாகத் தெரிவித்தார். இதுபற்றி மேலும் அவர் கூறியதாவது:—

திட்டமிட்டு நடத்தப்படும் நச்சுப் பிரசாரம்

சென்னையில் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும் அதன் காரணமாக தற்போது அமுலில் உள்ள படி அரிசித் திட்டத்தை தமிழக அரசு கைவிடப் போகிறது என்றும் திட்டமிட்டுச் செய்தி பரப்பப்பட்டு வருகிறது. இதற்கு ஒரு துளியும் ஆதாரம் கிடையாது.

மக்களிடையே வெறுப்பை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காகத் திட்டமிட்டு நடத்தப்படும் விஷமப் பிரச்சாரமாகும் இது!

தமிழக அரசிடம் போதிய கையிருப்பு இருக்கிறது; எக்காரணம் கொண்டும் சென்னை நகரில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படவே ஏற்படாது என்று மக்களுக்குத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உண்மைக்கு முற்றிலும் புறம்பானதாகும்

படி அரிசித் திட்டத்தைக் கைவிடும் நோக்கம் அரசுக்கு எப்போதும் இருந்தது கிடையாது. வேண்டுமென்றே அரசியல் நோக்கத்துடன் மக்களின் மனத்தைக் குழப்புவதற்காகவே தப்புப் பிரச்சாரம் செய்கிறார்கள். இது, தரக் குறைவான பிரச்சாரமாகும்; உண்மைக்கு முற்றிலும் புறம்பான விஷயங்களைப் பிரச்சாரம் செய்வது வருந்தத்தக்கது.

பொதுவாக அரிசி நிலைமை ஒவ்வோராண்டிலும் அக்டோபர் மாதத்தில் சற்றுச் சிரமமாக இருக்கும்! சம்பா அறுவடையினபோது சேமித்த தானியம் தீரும் கட்டம் இது; இந்த மாதத்தில்தான் குறுவை அறுவடை வந்து சேரும்; ஆனால், இந்த ஆண்டில் முந்திய ஆண்டுகளைப்போலல்லாமல் கையிருப்பு போதிய அளவு இருக்கிறது; ஆகவே பீதியடையக் காரணம் ஏதுமில்லை.

புதிய ரேஷன் கார்டுகள்

ஏற்கனவே கொடுக்கப்பட்ட ரேஷன் காடுகள் இத்திங்கள் 31-ம் நாளுடன் காலாவதி ஆகின்றது; புதிய கணக்கெடுத்துப் புதிய ரேஷன் கார்டுகளை வழங்க இன்னும் இரு திங்களாகும்; ஆகவே தற்போதுள்ள பழைய கார்டுகளுக்கே டிசம்பர் முடிய அரிசி தருவதற்கு ரேஷன் கடைக்காரர்களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது; இதில் சிரமம் ஏதும் இருக்காது.

அர்த்தமற்ற புகார்

சென்னை மாநகராட்சித் தேர்தலுக்காகவே நகர ரேஷன் கடைகளில் முதல்தர அரிசியின் விலை இரண்டாம் ரக அரிசியின் விலை அளவுக்குக் குறைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படும் புகார் அர்த்தமற்றதாகும்; இரண்டாம் தர அரிசி கையிருப்பில் இல்லையென்றால் முதல் ரக அரிசி அதே விலைக்குத் தரப்படுகிறது; சென்னையில் மட்டுமல்ல -- கோவையிலும் அப்படித்தான்; அங்கும் இரண்டாம் ரக அரிசி இல்லாவிடில் முதல் ரக அரிசிதான் தரப்படுகிறது.

ரேஷன் கடைகளில் மலிவு விலையில் கொத்துக் கடலை வழங்கப்படும்; கிலோ 95 காசுக்குக் கிடைக்கும்; பருப்பு விலையைக் கட்டுப்படுத்துவதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

பருப்பு விலையை ஏற்றுவதற்காக சில வியாபாரிகள் பதுக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள்; இது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது; இதை ஒருபோதும் அரசு அனுமதிக்காது; நிச்சயமாக விலை குறைய வேண்டும்; ஆகவே வியாபாரிகள் கடமையை உணர்ந்து செயலாற்ற வேண்டும்.

குழுக் கூட்டம்

"பெங்களூர் --- எசவசந்தபுரம் தி. மு. க. கிளையின் பொது உறுப்பினர் கூட்டம், 21—10—68 பிற்பகல் 2 மணியளவில் திரு. குப்பு ரெட்டி கட்டிடத்தில் நடைபெறும்" என்று செயலாளர் மு. மதிமாறன் அறிவிக்கிறார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செழியன், க. இராசாராம் ஆகியோர் உடனிருப்பது, 'நெடுந்தொலைவிலுள்ள வேற்று நாட்டில் வந்திருக்கிறோம்' என்ற எண்ணமே எழாதபடி செய்துவிட்டிருக்கிறது. டாக்டர் சதாசிவமும் துணைக்கு இருந்துவருகிறார்.

தலைமைச் செயலாளர், மற்றத் துறைகளின் செயலாளர்கள், அதிகாரிகள் முதலியோருக்கு என் அன்பினையும் வணக்கத்தையும் தெரிவிக்கவும்.

இங்கு இந்தியத் தூதர் நண்பர் பார்த்தசாரதி அவர்களின் பேருதவி என் மனத்தை வெகுவாக உருக வைக்கும் விதமாக இருந்து வருகிறது.

தமிழகத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அன்றாடம் வரும் கடிதங்களின் கனிவு, மாமருந்தாக இருக்கிறது.

திராவிட முன்னேற்ற கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-1) [illegible] வெளியிடப்படுகிறது.